[Mr. Chairman] *[1973 ஏப்ரல் 2*

Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973) and the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 6 of 1973), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

(2) அவை அலுவல் குறித்து

MR. CHAIRMAN : I have to inform the House that the Legislative Council will meet on the 3rd April 1973 and again on 5th April 1973 to consider the Official Bills.

If any hon. Member has booked reservation in the Railways for journey tomorrow, he may cancel it and get reservation for travel on 5th night.

4. கவன ஈர்ப்பு

விக் இந்தியா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதும் பதட்ட நிலையும் குறித்து.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் ஓர் அங்கமாகிய விக் இந்தியா தொழிற்சாலைக்கு முன்புறமும் உட்புறமும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளதும், 21—3—1973 ஆம் நாளன்று முற்பகலில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் ஒரு அங்கமாகிய விக் இந்தியா தொழிலாளர் சங்க உறுப்பினரும், கேண்டின் கமிட்டி உறுப்பினருமான திரு. பி. பத்தராயன் என்பவர் கடுமையாக வன் முறையால் தாக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு படுகாயப் படுத்தப்பட்டுள்ளது அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து."

** மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அம்பத்தூரில் உள்ள விக் இந்தியா தொழிற்சாலையில் 603 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இதில் இரண்டு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. இதில் அங்கீகாரம் பெற்றது (1) விக் இந்தியா தொழிலாளர் முன்னேற்ற சங்கம், தி.மு.க. வைத் தழுவியது. இச் சங்கத்தின் தலைவர் திரு. காட்டூர் கோபால், இதில் சேர்ந்த அங்கத்தினரின் எண்ணிக்கை சுமார் 400 பேர். (2) அங்கீகாரம் பெறாத குசேலரைத் தலைவராகக் கொண்ட (ஸி.ஐ.டி.யு) தொழிற் சங்கம் இருக்கிறது. இதில் சுமார் 100 பேர்கள் இருக்கின்றனர்.*